1993 மார்ச் 17]

109—

ஆவடி நகரியத்தில் தெருவிளக்குகள் அமைத்தல்.

*10254—திரு. டி. சுதர்சனம் : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆவடி நகரியத்தில் 700 தெரு விளக்குகள் அமைக்கக் கோரி மின்வாரியத்துக்கு அனுப்பப்பட்டதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) 761 இடங்களில் தெரு விளக்குகள் அமைக்கக் கோரப்பட்டதில் 249 இடங்களுக்கு வைப்புத் தொகை பெறப்பட்டது. அவற்றுள் 146 இடங்களில் தெரு விளக்குகள் பொருத்தப்பட்டு விட்டன. மீதமுள்ள 103 இடங்களில் 31—3—1993-க்குள் பணிகள் முடிக்கப்படும். ஏனைய 512 இடங்களுக்கான வைப்புத் தொகை பெறப் படவில்லை. இவற்றிற்கான வைப்புத் தொகை பெறப் பட்டு பணிகள் 31—3—1993-க்குள் முடிக்கப்படும்.

110—

பேராவூரணி தொகுதி பிள்ளையார் திடலில் புயல் பாதுகாப்பு இலலம் கட்டுதல.

*12804—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, சேதுபாவா சத்திரம் ஒன்றியம் பிள்ளையார் திடலில் புயல் பாதுகாப்பு இல்லம் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் : மாணபுமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

114—-

தொழிலாளர் நல வாரியம் மூலம் ஒசூரில் தொழிலாளர்களுக்கு ஒதுக்கப்பட்ட வீடுகலை வாடகைக்கு விடுதல்.

* 14513 திரு. கே. ஏ. மனோகரன்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தொழிலாளர் நல வாரியத்தின் மூலம் ஓசூரில் தொழிலாளர்களுக்கு குறைந்த வாடகையில் குடியிருப்பிற்கு எடுக்கப்பட்ட வீடுகள் வாடகைக்கு விடப்படாமல் உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அவற்றை வாடகைக்கு விட அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. சே. ரகுபதி, தொழிலாளர் நல அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஒசூரில் தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியத்தின் மூலம் தொழிலாளர்களுக்கு குறைந்த வாடகையில் ஒதுக்கீடு செய்வதற்கென குடியிருப்புகள் ஏதும் எடுக்கப்படவில்லை;

(ஆ) ஒசூர், பாகலூர் ரோட்டில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் மூலம் கட்டப்பட்டு தொழிலாளர் மலிவு வீட்டு வசதித் திட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட 84 'ஈ' டைப் வீடுகளை குறைந்த வருவாய் உள்ள தொழிலாளர்களுக்கு ஒதுக்கீடு செய்யும் கருத்துரு அரசினால் பரிசீலனை செய்யப்பட்டது. தற்போது ஒவ்வொரு தொழிலாளியும் குறைந்த பட்ச வருவாயாக மாதம் ரூ. 350-க்கு குறையாமல் (நாள் ஒன்றுக்கு குறைந்த பட்சம் ரூ. 20-க்குக் குறையாமல்) சம்பளம் வாங்கும் தொழிலாளியாக இருப்பதால், இக் குடியிருப்புகளை தொழிலாளர் மலிவு வீட்டு வசதித் திட்டத்திலிருந்து வீட்டு வசதி வாரிய தவணைக் கொள்முதல் திட்டத்திற்கு மாற்றி ஒசூர் தொழில் நிறுவனங்களின் சங்கத்திடமிருந்து பெறப்பட்டுள்ள தொழிலாளர்களின் பட்டியலில் கண்டுள்ள தொழிலாளர்களுக்கு ஒதுக்கீடு செய்வது என்ற செயற்குறிப்பு அரசின் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறையின் பரிசீலனையில் உள்ளது.